இணைப்பு–II

(420 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கோரிக்கை எண் 10–வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

அறிவிப்புகள், 2010–2011

1. விழுப்புரத்தில் ஒருங்கிணைந்த வணிக வரித் துறை அலுவலக புதிய கட்டடம் கட்டுதல்

விழுப்புரம் மாவட்டத்தில் தற்போது தனியார் கட்டடங்களில் ஐந்து சார்நிலை வணிக வரித் துறை அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. அரசு அலுவலர்களுக்கும் மற்றும் வணிகர்களுக்கும் பயன்படும் வகையில் அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய ஒருங்கிணைந்த வணிக வரி அலுவலகம் மாவட்ட ஆட்சியரின் பெருந்திட்ட வளாகத்தில் கட்டப்படும்.

2. ஒரே முறை தீர்வுத் திட்டம்

2008-2009 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டபடி, தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகள் தீர்வு) சட்டம் இயற்றப்பட்டது. இந்தச் சட்டம் 1-11-2008 முதல் 31-3-2009 வரையில் நடைமுறையில் இருந்தது. வணிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்தச் சட்டம் 3-8-2009 முதல் 2-11-2009 முடிய நீட்டிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின்கீழ் மொத்தம் 10,250 விண்ணப்பங்கள் பெறப்பட்டு ரூபாய் 85.39 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட இதுபோன்ற திட்டங்களில் வசூல் செய்யப்பட்ட தொகைகளில் இதுதான் அதிகமானது ஆகும். தற்பொழுது, இது போன்ற ஒரு திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வணிகர்களும், வணிகர் சங்கங்களும் அரசிடம் வைத்துள்ளனர். மதிப்புக் கூட்டு வரி, 1-1-2007 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளதை கருத்திற் கொண்டும், தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959 மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956 ஆகிய சட்டங்களின்கீழ் உள்ள வரி நிலுவைகளை தீர்வு செய்யும் வகையில்,

[2010 மே 3

தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகள் தீர்வு) சட்டம், 2010 விரைவில் அறிமுகப்படுத்தப்படும்.

3. பெரு வணிகர்கள் வரி செலுத்தும் அலுவலகம்

2009-2010 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் வசூலிக்கப்பட்ட வரி ரூபாய் 24,819 கோடியாகும். இதில், கேளிக்கை வரி, ஆடம்பர வரி, பந்தய வரி நீங்கலாக உள்ள தொகையில் ரூ.14,521 கோடி சென்னையில் உள்ள முதல் 100 நிறுவனங்களால் செலுத்தப்பட்டுள்ளது. இத்தொகை சென்னை கோட்டங்களின் மொத்த வரி வருவாயில் 76 விழுக்காடும், மாநில வரி வுருவாயில் 60 விழுக்காடும் ஆகும். அவ்வாறு அதிக வரி செலுத்தும் நிறுவனங்களுக்கு சிறந்த சேவையை அளித்திடவும், அவர்களிடம் இருந்து துவங்குகின்ற மதிப்புக் கூட்டு வரியினை கூர்ந்து கவனித்து வரி வசூல் மற்றும் வரி விதிப்பு செய்திடவும், முழுவதும் நவீனமயமாக்கப்பட்ட ஒருங்கிணைந்த அலுவலகம் ஒன்று இணை ஆணையர் தலைமையின்கீழ் நான்கு வரி விதிப்பு துணை ஆணையர்களைக் கொண்டதாக உருவாக்கப்படும். அவ்வலுவலகத்தில் மாதாந்திர நமூனாக்கள் மற்றும் கொள்முதல்/ விற்பனை விபரங்கள் பதிவு செய்தல், படிவங்களைப் பெறவும் வரி திரும்பப் பெறவும் விண்ணப்பங்கள் பெறுதல், வரி வசூலித்தல் போன்ற அனைத்துப் பணிகளும் தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி கணினி வழியாகவே மேற்கொள்ளப்படும். காலப்போக்கில் பெருவணிகர்களின் எண்ணிக்கையை 100-லிருந்து 300 ஆக உயர்த்தி மாநிலத்தின் மொத்த வருவாயில் 77 விழுக்காட்டை இந்த சிறப்பு வரி விதிப்பு வட்டத்தின் வழியாகவே பெற வகை செய்யப்படும். இவ்வலுவலகத்திற்காக உருவாக்கப்படும் சிறப்பு மென்பொருட்கள் (Special Software) மாநிலம் முழுவதும் உள்ள இதர 319 வரி விதிப்பு வட்டங்களிலும் பயன்படுத்த ஆவன செய்யப்படும்.

4. கணினி குறிக்கோள் திட்டம் – வணிக வரி

இந்திய அரசாங்கத்தின் Mission Mode Project (MMP) திட்டத்தின் கீழ் முன்னுரிமை அளிக்கப்படும் துறையாக வணிக வரித் துறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்தும் விதமாக விரிவான திட்ட அறிக்கை, இரண்டாண்டு செலவினமாக

2010 மே 3]

ரூபாய் 76.19 கோடி அளவில் திட்டமிடப்பட்டு இந்திய அரசாங்கத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக முதல் கட்டமாக ரூ.47.89 கோடி மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த ரூ. 47.89 கோடியில், ரூ. 32.53 கோடி மத்திய அரசின் பங்காகவும், ரூ.15.36 கோடி மாநில அரசின் பங்காகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2009-2010 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.12.35 கோடி மத்திய அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் கணினிகள் மற்றும் கணினி சம்பந்தப்பட்ட நுகர்பொருட்கள் மற்றும் கணினி வலைப்பின்னல் தளவாடங்கள் வாங்கப்பட்டு வணிக வரித் துறையில் பயன்படுத்தப்படும். மேலும், மென்பொருள் மேம்பாடு மூலம் வணிகர்களுக்கு பல வசதிகள் எளிதாக கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

5. சென்னை (மேற்கு) கோட்டம் புதிதாக உருவாக்குதல்

1-1-2007 இல் மதிப்பு கூட்டு வரி அமல்படுத்தப்பட்ட பின்பு, சென்னை வணிக வரிக் கோட்டங்களில் பணிப் பளு பன்மடங்கு உயர்ந்துள்ளது. வரி வருவாய் ஈட்டுதல், நிலுவை வரி வருவாய் ஈட்டுதல், வரி விவர அறிக்கை மற்றும் மதிப்பு கூட்டு வரியின் கீழ் புதிய வணிகர்கள் பதிவு செய்தல் ஆகிய முக்கிய பணிகளின் நிலையினை பரிசீலித்து, வரிவிதிப்பு அதிகாரிகளின் செயல்திறன் மேற்பார்வையிடுதல் மற்றும் பணித்திறன் ஆய்வு செய்தல் ஆகியவற்றை மேற்பார்வையிடுவது மிகப் பெரிய பொறுப்பாகிவிட்டது. மொத்த வணிகவரி வருவாயில் ஏறக்குறைய 80 சதவீத வணிக வரி வருவாய், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களை உள்ளடக்கிய வணிகவரி கோட்டங்களான சென்னை (வடக்கு), சென்னை (தெற்கு), சென்னை (மையம்) மற்றும் சென்னை (கிழக்கு) ஆகிய நான்கு கோட்டங்களிலிருந்து வசூலிக்கப்படுகிறது. சென்னை (வடக்கு) மற்றும் சென்னை (கிழக்கு) கோட்டங்களில் வணிக வரி வருவாயினை ஈட்டும் பணியினை நிர்வகிப்பது மாநிலத்தின் மற்ற கோட்டங்களின் அளவில் சீரிய முறையில் செயலாற்றும் வகையில் பணியிடங்கள் வகுக்கப்பட்டுள்ளது. இக்கோட்டங்களை ஒப்பிடுகையில், சென்னை (தெற்கு) மற்றும் சென்னை (மையம்) ஆகிய கோட்டங்கள் வரி வருவாய் ஈட்டுவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. இவ்விரு கோட்டங்களை நிர்வகிப்பதில் பணிப்பளு அதிகமாகவும்,

[2010 மே 3

பரப்பளவு அதிகமாகவும் இருப்பதால், ஏற்படும் சிரமங்களை களைய சில சரகங்கள் மற்றும் வரிவிதிப்பு வட்டங்கள் என உள்ளடங்கிய புதிய தனிக் கோட்டம் அமைப்பது தொடர்பாக ஆராயப்பட்டது.

சென்னை கோட்டங்களான சென்னை (தெற்கு) மற்றும் சென்னை (மையம்) ஆகியவற்றிலிருந்து மாநில அளவில், வரி வருவாயினை பெருக்குவது மற்றும் வரி வருவாய் ஈட்டும் திறனை பயன்படுத்தி, வரி வருவாயினை பெருக்குவது மற்றும் அது தொடர்பான சிரமங்களைக் களைந்து சீரியமுறையில் நிர்வாகம் செய்ய வேண்டிய காரணங்களுக்காக ஒரு புதிய கோட்டமாக சென்னை (மேற்கு) கோட்டம் உருவாக்கப்படும். இவ்வாறு ஒரு புதிய கோட்டம் உருவாக்கப்படுவதால் மாநிலத்தில் வணிக வரி வருவாய் பெருகவும், அதே சமயம் இணை ஆணையர் (வணிக வரி) தலைமையின்கீழ் புதிய கோட்டத்தினை எளிதாக நிர்வகிக்கவும் இயலும்.

6. வேலூர் (செயலாக்கம்) கோட்டம் புதிதாக உருவாக்குதல்

திருச்சி (செயலாக்கம்) கோட்டம் 2-7-1986 அன்று உருவாக்கப்பட்டு, சோதனைச் சாவடிகள் மற்றும் பறக்கும் படை மூலம், வாகன தணிக்கை மற்றும் வணிக நிறுவனங்களை ஆய்வு செய்து, வரி ஏய்ப்பினை கட்டுப்படுத்தி துறை செயலாற்றி வருகிறது. திருச்சி (செயலாக்கம்) கோட்டமானது, மிகப் பெரிய பரப்பளவுள்ள பகுதியாகும். அதாவது, திருச்சி (வணிக வரி) மற்றும் வேலூர் (வணிக வரி) கோட்டங்களை உள்ளடக்கியதாகும். எனவே, பணிப் பளு அதிகமாகவும், பரப்பளவு மிகுதியாகவும் இருப்பதால் ஏற்படும் சிரமங்களை களைய, திருச்சி (செயலாக்கம்) கோட்டத்தினை இரண்டு கோட்டங்களாக பிரிப்பது தொடர்பாக ஆராயப்பட்டது. திருச்சி (செயலாக்கம்) கோட்டத்தினை, திருச்சி (செயலாக்கம்) கோட்டம் எனவும், வேலூர் (செயலாக்கம்) கோட்டம் எனவும் இரண்டாக பிரிப்பதால், ஆந்திரா, கர்நாடகா மற்றும் புதுச்சேரி மாநிலங்கள் எல்லையில், பொருட்களின் போக்குவரத்தினை கண்காணித்து, வரி ஏய்ப்பினை தடுத்து அரசுக்கு வரி வருவாயினை அதிகப்படுத்த முடியும். இவ்வாறு, ஒரு புதிய கோட்டம் உருவாக்கப்படுவதால், மாநிலத்தில் வணிக வரி வருவாய் பெருகவும், வணிகர்களை கண்காணித்து அரசுக்குப் பெரும் வருவாய் ஈட்ட முடியும். மேலும், இணை ஆணையர் (செயலாக்கம்) தலைமையின்கீழ் புதிய கோட்டத்தினை எளிதாக நிர்வகிக்க இயலும்.

2010 மே 3]

7. பழைய வாகனங்களுக்குப் பதிலாக புதிய வாகனங்கள் வாங்குதல்

வணிக வரி வசூலை மேம்படுத்தும் பொருட்டு, பயன்படுத்தும் நிலையில் இல்லாத, கழிவு செய்யப்பட்ட வாகனங்களுக்குப் பதிலாக, புதிய 18 வாகனங்கள் வாங்கப்படும். இதனால் வணிக வரி வசூல் நடவடிக்கையில் துரிதமாக செயலாற்ற இயலும்.

8. ஏற்கெனவே தாக்கல் செய்யப்பட்ட மாதாந்திர நமூனாக்களில் தவறுகள் ஏதேனும் இருப்பின், அவற்றை சரிசெய்ய வாய்ப்பு அளித்தல்

மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006-ன்படி, வணிகர்கள் வரியை மாதாந்திர நமூனாக்கள்மூலம் தாக்கல் செய்கின்றனர். மேற்படி வணிகர்கள் தங்கள் மாதாந்திர நமூனாக்களை தாக்கல் செய்த பிறகு எந்தவித விடுதலோ அல்லது தவறான விவர அறிக்கையோ இருப்பதாகக் கருதுகையில், தற்போது நடைமுறையிலுள்ள விதிகளின்படி திருத்திய படிவத்தை தாக்கல் செய்ய இயலாது. வணிகர்களின் வேண்டுகோளினை ஏற்று, மற்ற மாநிலங்களில் உள்ளதைப் போன்று திருத்திய படிவம் தாக்கல் செய்வதற்கு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி விதிகள் 2007-இல் உரிய திருத்தம் மேற்கொள்ளப்படும்.

9. வரி செலுத்துவதன் அவசியம் குறித்து பள்ளிக் கல்வியில் பாடத் திட்டம் அறிமுகப்படுத்துதல்

மாநிலத்தின் முன்னேற்றத்திற்காகவும், மக்கள் நலனுக்காகவும், அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்தி வருகிறது. இந்த திட்டங்களை அமுல்படுத்திட, அரசுக்கு ஏற்படும் செலவினங்களை அரசு வரி வருவாய்மூலமாக ஈடுகட்டுகிறது. வரி வருவாய் ஈட்டுவதில் மதிப்புக் கூட்டு வரி முக்கிய பங்கு வகிக்கிறது. பொதுமக்களிடமிருந்து வியாபாரிகளால் வசூலிக்கப்படும் வரி, அரசுக் கணக்கில் விடுபடாமல் சேர்க்கப்படும்போது மட்டுமே அரசுக்கு முழுமையான வருவாய் கிடைக்கும். இதனை உறுதி செய்து கொள்ள, பொதுமக்கள் பொருட்களை வாங்கும்போது, அதற்கான விற்பனை பட்டியலை கேட்டுப் பெறவேண்டியது அவசியமாகிறது. நடைமுறையில் பெரும்பான்மையான மக்கள் விற்பனை பட்டியலை

கேட்டுப் பெறுவதில்லை என்பதால் சில நேரங்களில் இது வரி ஏய்ப்பிற்கு வழி வகுக்கிறது. எனவே, பொதுமக்களிடையே, வணிக வரி சம்பந்தமாக ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

எனவே, பள்ளிப் பருவத்திலேயே மாணவ, மாணவிகளிடம் வரி செலுத்துவதன் அவசியத்தை, அவர்கள் உணர்ந்துகொள்ளும் வகையில், பள்ளிப் பாடத் திட்டத்தில், பள்ளிக் கல்வித் துறையின் ஒப்புதலுடன், வரி சம்பந்தமாக புதிய பாடம் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாடு சட்டப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS